## நாணயச் சபை

## இலங்கை மத்திய வங்கி

2018 ஒத்தோபர் 12 வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018இன் 07ஆம் இலக்கம்

---

### உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின 76(ஜே)(1) மற்றும் அதன் துணைப்பிரிவு (3) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவுகளின் கீழ் விடுக்கப்பட்டது.

நாணயச் சபை, இறக்குமதிகளையும் செலாவணி வீதத்தின் மீதான மோசமான தாக்கத்தினையும் கட்டுப்படுத்தும் நோக்குடன், உந்து ஊர்திகள் மற்றும் இன்றியமையாதனவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பது தொடர்பில் தேசிய சேமிப்பு வங்கிக்குப் பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

| | |
|---|---|
| 1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு | வங்கித்தொழில் சட்டத்தின் துணைப்பிரிவு (3) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவுகள் 76(ஜே)(1)இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு, சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஏதேனும் வகைக்கு அல்லது ஏதேனும் குறிப்பிட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு அத்தகைய வங்கிகளின் வியாபாரத்தின் எந்தவொரு விடயத்திலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. |
| 2. இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதிலிருந்து விலகியிருத்தல் | அட்டவணை ‘அ’ இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தவிர்ந்த உந்து ஊர்திகளினதும் அட்டவணை ‘ஆ’ இல் குறித்துரைக்கப்பட்ட இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களினதும் இறக்குமதிகளுக்கு நாணயக் கடிதம் அல்லது ஏனைய ஏதேனும் கொடுப்பனவு முறைமைகளினூடாக வசதயளிப்பதிலிருந்தும் தேசிய சேமிப்பு வங்கி மறுஅறிவித்தல் வரை விலகியிருத்தல் வேண்டும். |
| 3. இரத்துச்செய்தல் | உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடு மீது 2018 செத்தெம்பர் 28ஆம் திகதி விடுக்கப்பட்ட கடிதம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. |
| 4. நடைமுறைப்படுத்தல் | இப்பணிப்புரையானது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும். |

சி. ஜே. பி. சிறிவர்த்தன
முதன்மை நிறைவேற்று அலுவலர்/ மூத்தத் துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

இந்தப் பணிப்புரையின் அட்டவணை அ மற்றும் ஆ இனைhttps://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Banking_Act_Direction_No_7_of_2018.pdf என்ற வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது.